gistered as a News paper in Ceylon

P. M. G. NO. H. A 89/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு புரட்டாதிமீ உஉஉ (1946 அக்டோபர் 8 செவ்வாய்க்கிழமை) [இல ருக


## ஜெர்மன் தலைவர்கள்

### அவர்களின் முடிவு

அன்று ஜெர்மனியிலே ஹிட்லரின் கையாட்களாக விருந்து, இந்த உலகத்தையே கலக்கிவந்த நாஸித்தலைவர்கள் யுத்தகாலத்தில் இழைத்த குற்றங்களுக்காகவும், யுத்தத்தில் பல நாடுகளை இழுத்தற்காகவும் நூரெம்பேர்க்கில் குற்றஞ் சாட்டப்பட்டனர். 10 மாத காலமாக விசாரணை நிகழ்ந்தது. ஈற்றில் சென்ற வாரம் தீர்ப்பு வாசிக்கப்பட்டது. அது வருமாறு:—

கோயரிங் :- மரணதண்டனை
ஹெஸ்:—ஆயுட்காலச்சிறைத்தண்டனை
றிபன்ரொப் :- மரணதண்டனை
கெயிற்றல் :- மரணதண்டனை
கால்ரன்பிரனர் :- மரணதண்டனை
ரோசன்பேர்க் :- மரணதண்டனை
பிராங் :— மரணதண்டனை
பிரிக் :- மரணதண்டனை
ஸ்ரீச்சர் :- மரணதண்டனை
பங் :- ஆயுட்காலச் சிறைத்தண்டனை
றீடர் :- ஆயுட்காலச்சிறைத்தண்டனை
டொனெற்ஸ் :- 10வருஷத்தண்டனை
ஷிராக் :- 20 வருஷத் தண்டனை
ஸவுக்கல் :- மரண தண்டனை
ஜோடல் :- மரணதண்டனை
செ[illegible]ஸ் இன்காட்:- மரணதண்டனை
ஸ்[illegible]பர் :- 20 வருஷத் தண்டனை
நியூரூத் :— 15 வருஷத் தண்டனை

வொன்பேப்பன், ஷாக்ற், விறிற்ஸ் என்னும் மூவரும் நிரபராதிகள் எனக்கண்டு விடுதலை செய்யப்பட்டனர்.

#### மூவர் அப்பீல்

இவர்களில் ஹெஸ், ஸ்ரெயிச்சர், பிராங் என்னும் மூவரும் தம் தண்டனையைத் தவிர்க்கவேண்டும் என்று உயர் அதிகாரிகளுக்கு மனுச் செய்திருக்கிறார்கள்.

## 35 புசல் நெல்

### குஞ்சுப்பரந்தனில் நால்வர் அகப்பட்டனர்

(நமது நிருபர்)

குஞ்சுப்பரந்தன் வாசிகளான 6 பேர் 2 வண்டிகளில் 35 புசல் நெல்லேற்றிக்கொண்டு தோணித்துறை முகப் பக்கமாக ஆனைக்கண்டாயம் என்ற இடத்திற் செல்லும்போது குஞ்சுப்பரந்தன் உணவுக்கட்டுப்பாட்டுக் காவலர் வே. இராசையாவினால் பிடிக்கப்பட்டார் என்று தெரிகிறது. வண்டிகளில் நெல்லைஏற்றிச் சென்ற அறுவரில் இருவர் காட்டுமார்க்கமாகத்தப்பிவிட்டனர்: ஏனையோராகிய செல்லர் வினாசித்தம்பி (2) கார்த்திகேசு கதிரேசு (3) ஞானிபார் சரவணமுத்து (4) சின்னர் கைலாசபிள்ளை என்னும் நால்வரும்பழை டிஸ்திறிக் அதிகாரியால் (D. R.O) சாவகச்சேரி நீதிஸ்தலத்திற் சென்ற 3-10-46 இல் குற்றம்சாட்டப்பட்டனர்.

நீதிபதி எதிரிகளைப் பிணையில் விடுத்து வழக்கை 11-10-46 க்குத் தவணையிட்டார்.

## இன்னும் எதிர்ப்பு

### சேனநாயாகாவுக்கு விரோதமான கிளர்ச்சி

மிஸ்ரர். டி. எஸ். சேனநாயக்காவுக்கு வரவர எதிர்ப்புப் பலமாகவருகிறது இலங்கையில்உள்ள அரசாங்க ஊழியர்சம்மேளனம்தானும், மிஸ்ரர் சேனநாயக்காவை எதிர்க்கத் தீர்மானித்து, ஓர் விஞப்பத்திரத்தைப் பாராளு மன்றத்து அபேட்சகராக வரவிருப்பவர்க்கு அனுப்பி யிருக்கிறது

கட்சிகளிற் சேராது சுயேச்சைவாதிகளாகவரும் அபேட்சகர்கள், சேனநாயக்காவையும் அவரது காள்கைகளையும் எதிர்ப்போம்என்றுவாக்குறுதி செய்யவேண்டும். அப்படி செய்தால்தான் இவர்களுக்குப் பொதுஜன வாக்குக் கிடைக்கும் என இந்தப் பத்திரம் கூறுகிறது.

### "ஐயா" - "ஊழியன்"

பொதுஜனங்களுக்கு அரசாங்கம் எழுதும் கடிதங்களில் அன்பார்ந்த ஐயா என்று தொடங்கி, இங்ஙனம் தங்கள் ஊழியன் என்று முடிப்பது சிலகாலத்துக்கு முன் வழக்கமாகவிருந்தது, அந்தமுறையை யுத்தகாலத்தில் தவிர்த்து இருந்தார்கள். ஆனால் இப்படியான மரியாதையான முறையை அரசாங்கம் இனிக் கைக்கொள்ளவேண்டும் என்று தேசாதிபதி இப்போது கட்டளையிட்டிருக்கிறார்.

### பிரிட்டிஷ்-அமெரிக்க பிணக்கு

பலஸ்தீன மகாநாட்டைத் தவணையிட்டது அமெரிக்க ஜனாதிபதி மிஸ்ரர் ட்ரூமனுக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் மனக்கவலையையும் கொடுத்துவிட்டது பலஸ்தீனத்திலே யூதரைக் குடியேற்றவேண்டும் என்னும் விஷயத்தில் அவர் யூதர்சார்பாகச் சிரத்தை எடுத்துக்கொண்டிருந்தார் எனவே, யூதரைக் குடியேற்றும் பிரச்சினையைத் தீர்த்து வைக்காது காலம் தாழ்த்துதல் அவர்க்கு வெறுப்பைக் கொடுத்திருக்கிறது. யூதரைக் குடியேற்றும் விஷயத்தில் உடனே நடைவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவ்விஷயத்தில் அமெரிகா தன்னாலான உதவிகளைத் செய்யும் என்றும் அவர் தமது அறிக்கையிற் குறிப்பிட்டிருக்கிறார்.

### இனி ஆங்கிலம் வேண்டியதில்லை

இலங்கையின் புதிய பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள், சபையிலே தமிழில் அல்லது சிங்களத்திற் பேசலாம். ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும்என்ற கட்டாயம் இல்லை. ஆனால் சபையின் உத்தியோகார்த்தமான சகல விஷயங்களும் ஆங்கிலத்திலேயே இருக்குமாம்.

### புதிய குடியேற்றநாட்டு மந்திரி

பிரிட்டிஷ் மந்திரசபை மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இதுகாறும் குடியேற்ற நாட்டு மந்திரியாயிருந்த மிஸ்ரர் ஜோர்ஜ் ஹோல் என்பவர் கடற்படை மந்திரியாக நியமிக்கப்பட, அவரிடத்துக்கு கிரீச் ஜோன்ஸ் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சென்ற வியாழக்கிழமை அவுஸ்திரேலியாவிலிருந்து 3 லட்சம அப்பிள்ப்பழங்கள் கொழும்புத் [illegible] இறக்குமதி யாக்கப்பட்டன.

## சைவர்களின் முதல் நூல்கள்

(சி. நாகையா)

உலகத்தில் கிறீஸ்தம், பௌத்தம், முகமதியம் சைவம் ஆகிய சமயங்களே பிரதான சமயங்களாகும்: இவைகளொவ்வொன்றும் தத்தம் பிரமாண நூல்களை ஆதாரமாகக் கொண்டு இயங்கும். ஆனால் சைவத்துக்கு மாத்திரம் பல பிரமாண நூல்களிருப்பதை நாம் காணலாம். இதை யாராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சிவபெருமான், அம்பாள், பிள்ளையார், கந்தசுவாமி, வைரவராகிய இத்தெய்வங்களுக்குக் கோயில் கட்டிச் சைவர் வழிபடுகின்றனர். ஆனால் அம்மன் சிவபெருமானுடைய சக்தியென்றும், கணபதியும், முருகனும் வைரவரும் உபசாரமாய் திருக்குமார ரென்றும் அழைக்கப்படுகினும், உண்மையிற் சிவபெருமானே யென்றும், அவருக்கு மிவர்களுக்குமொரு வித்தியாசமு மில்லையென்றும், அவருடைய மூர்த்தங்களேயொழிய இவர்கள் வேறல்லரென்றும் அறிவுடையோர் கூறுவர். அவருக்குப் போலவே இவர்களுக்கும் கோயிற்கருமங்கள் யாவுஞ் செய்யப்படுகிறதை நாம் காணலாம். பிரமாண நூலுஞ் சிவாகமமே. கணேசருக்கு அல்லது சுப்பிரமணியருக்கென்று வேறு ஆகமப் பிரமாணங் கொண்டு கொடியேற்றுவதுமில்லை;நித்திய நைமித்திகங்கள் செய்வதுமில்லை.

இனி, சைவர்கள் தங்கள் சமயானுட்டானங்களிற் கொள்ளும் பிரமாணங்கள் யாவையென் றாராய்வோம். இலக்கண இலக்கிய அறிவில்லாத சிலரை உங்கள் சமயமென்னவெனக் கேட்டால் (தமிழ்) என்று பதிலளிக்கின்றனர். இவர் சொல்லுவது தாம் கிறீஸ்தவரல்லர் புத்தரும் முகமதியரு மல்ல ரென்பதே யாகும். உங்கள் பிரமாண நூலெது என்று பின்னருந் தெருட்டத் தொடங்கினால், இவர்கள் தங்கள் பிழையைக் காண்பர். ஆனால் நல்ல மறுமொழி வராது.

இன்னொரு பகுதியார் தங்கள் பிரமாணம் சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி யென்று ஆங்கிலத்திற் தாம் பெற்ற பொருளைக் காட்டுவர். உவர்கள் இருபேரும் தமக்குப் பிரமாணமாக வேதங்களைக் கொள்ள நீங்கள் அவர்களைப் பிரமாண மென்றால் நீங்களும் வேதங்களை ஏற்றுக் கொண்டீர்களல்லவா என்றால் ஒருவாறு ஒத்துக்கொள்ளவர்.

வேறுசிலர், விரதானுட்டானங்களிற் சிறந்தவர்; கந்தபுராணம் பெரிய புராணங்களைப் பிரமாணமாகப்பாராட்டுபவர். புராண இதிகாசங்கள் ஸ்மிருதிகள், பல கலைஞானங்கள் இவைகளெல்லாம் வேத சிவாகமங்களிற் சுருக்கிச் சொன்ன உண்மைகளை விரித்து விளக்க வெழுந்தனவென்று காட்டினால், அச்சான்றுகளுடன் ஸ்தாபித்தால் வேதசிவாகமங்கள் தங்களது பிரமாண மென்றறிவர்.

இன்னுஞ் சிலருண்டு இவர் [illegible]சிக்காரர். இப்பொழுது இவர்கள் தாம் தென்னிந்தியாவில் வாயாடிகள். சைவகுரு வகுப்பினரை நிந்திப்பவர். வடமொழியை இளிப்பவர். இருக்காதி வேதங்களைத் தூஷிப்பவர். இவர்கள் சுமார் 60 வருடங்களுக்கிப்பாற் தோற்றியவர்கள். உத்தியோகங்கிடையாத காய்ச்சலினால் திரண்டவர். எல்லாவற்றையுந் தமிழிற் காணப் பெரிதும் உழைத்துவரும் தனித்தமிழபிமானிகள் துர்அபிமானம் எவ்வளவு தூரம் நடுநிலையைக் கெடுக்குமென்பதற்கோர் எடுத்துக்காட்டாயுள்ளவர். வேதசிவாகமங்கள் முன் தமிழிலிருந்தன, இப்பொழுதில்லை; கடல் கொண்டுபோய்விட்ட தென்றவர். அவைகளுக்குப் பதிலாகத் தொல்காப்பியம், திருக்குறள், பன்னிருதிருமுறைகள், பதினான்கு சாத்திரமாகிய இவைகளையும் இன்னுஞ் சில நூல்களையு மாதாரமாகக் கொள்ளலாமென்பவர். வேத சிவாகமங்கள் இறைவாக்கு. இவைகளுடன் ஒத்தபடியில் வைத்தெண்ணக் கூடியவைகள், இவர்கள் சொல்லும் தொகுதியில், 12 திருமுறைகளும் 14 சித்தாந்த சாஸ்திரங்களுமே. இந்தப் பன்னிரண்டும் பதினான்கும் வேத சிவாகமங்களையே தமக்குப் பிரமாணமாகப் பல விடங்களிற் போற்றிப் பெருமை கொள்ளும். "வேதவிழுப்பொருளை" "ஆகமமாகி நின்றண்ணிப்பான்" "நான்மறையினுட்பொருளை" "இக்கிரமத்தென்னுமிருக்கு" "ஒன்றொன்றுதருமறைகள்" "வேதமோடாகமம் மெய்யாமிறைவனூல்" "பெருநூல்" முதலியன: யிரிவஞ்சி விடுத்தாம்.

தேவாரம் வேதசாரம் மெய்யே. ஆனால் ஞானகாண்டப் பொருளையே தோத்திரமாய்ப் பரக்கச் சொல்லும். 14 சாஸ்திரங்களும் ஆகமசாரப் பொருளே. இவைகளும் நான்காம் பாதமாகிய ஞானபாதப் பொருளையே சொல்லும். வேத சிவாகமங்கள் சரியை கிரியை யோக ஞானமாகிய நான்கு பாதங்களையுங் குறைவறக்கூறி, அறிவுலகம் முழுவதையுந் தம்மிடத்தடக்கி விளங்க அவற்றிலுள்ள சில பகுதிகளைக் கூறுமிவைகளை அவற்றோடொப்பக் கொள்வது அல்லது அவைகளைவிட்டு இவைகளைக் கொள்ளல் பொருத்தமற்றது.

இதுகாறுங் கூறியவற்றால் வேத சிவாகமங்களே சைவர்தமது தலைசிறந்த தனிப்பெரும் பிரமாண நூல்களென்றும், வேறு எவையும் இவைக்கிணையில்லை யென்றும் ஒருவாறு காட்டினோம்.

### எதிரி விடுதலை

சண்டிருப்பாயைச் சேர்ந்த சின்னக்குட்டி தம்பிராசா என்பவர், அவ்வூர் கார்த்திகேசு சின்னத்தம்பி என்பவரைக் கொலை செய்ய முயற்சித்தார் என்று, யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட் நீதியரசர் மிஸ்ரர் A. R. H. கனகரத்தின முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட வழக்கில் எதிரி நிரபராதியெனக் காணப்பட்டு விடுதலையடைந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஆ
புரட்டாதி ௨௨௳ செவ்வாய்க்கிழமை

## ஜர்மனிய யுத்தக் குற்றவாளிகள்

ஜர்மனிய சர்வாதிகாரியாகவிருந்து இரண்டாவதுஉலகயுத்தத்தைநடத்தி ஹேர் ஹிட்லருக்குத் துணையாகநின்றுபலஅக்கிரமங்களைச் செய்தார்களென்னுங் குற்றச்சாட்டின் பேரில் கோயரிங் முதலாகச்சொல்லப்பட்ட இருபது ஜர்மனிய வீரர்கள், நூரன் பேர்க் நகரில் ஒருவருட காலம் வரையில் ஐக்கிய ராச்சியத்தார் தெரிந்து நியமித்த நீதிபதிகளால் விளங்கி, மூவரொழிந்த ஏனையோ ரனைவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். அவர்களுட் கூடிய தொகையினருக்கு விதிக்கப்பட்டமை மரண தண்டனையே யாகும்; சிலர் சீவியகாலம் வரையிற் சிறைவாசம் விதிக்கப்பெற்றனர்.

பண்டைக்காலத்திற் போரிலே தோல்வியுற்ற அரசர்கள் பிரதானிகளை, வென்ற அரசினர் சிறையில் வைத்தலும், அப்படித்தோல்வியுற்ற அரசர்கள் உயிரோ டிருப்பின் நாட்டின் சமாதானத்திற்குப் பங்கமுண்டாகிக் கலகம் மூளுமெனக் கண்டால், வெற்றிபெற்ற அரசர்கள் அவர்களைக் கொலை செய்ததுமுண்டெனலாம்; ஆனல் தோல்வியுற்ற அரசர்களை, வென்றவர்கள் அடக்கித் தமக்குத் திறை கொடுத்தாளும்படி செய்தலே பாரதநாட் டரசர்களின் பழைய கொள்கையாக விருந்தது; மேலைத் தேசத்திலும், வென்ற பக்கத்தவர்கள் தோல்வியுற்றார்களைக் கொலைக் குற்றவாளிகள் உலக சமாதானத்திற்குப் பங்கஞ் செய்தவர்களெனக் குற்றஞ் சுமத்தி, தாங்களே நீதிபதிகளாக விருந்து விசாரணை செய்து மரண தண்டனை முதலாம் பெருந் தண்டனைகளை விதித்தமை முதன்முதல் இப்போழுதேயாகும்; கீழைத் தேசத்து மக்களாகிய நாங்கள் நூற்றுக்கணக்கான வருடங்களாக மேலைத்தேசத்தினரால் அடக்கியாளப்பட்டு வருகின்றேமெனினும்,மேலைத்தேச ஞாயப் பிரமாணங்கள் கொள்கைகளுக்கும் கீழைத்தேசப் பிரமாணங்கள் கொள்கைகளுக்குமிடையே பிரதானமான வேறுபாடுகளிருத்தலைக் காண்கின்றேம்; நூரன் பேர்க்கில் நடந்த நீதிவிசாரணையுந் தண்டனையும் கீழைத்தேச மக்களாகிய எங்களுக்கு ஓநாய் ஆட்டுக் குட்டியின் கதையை ஞாபகப்படுத்துகிற தெனலாம்.

இந்த நூரன்பேர்க்கில் நடந்த விசாரணையிலே நீதாசனம் வகித்தவர்கள் பிருத்தானியர் ருஷியர் அமெரிக்கர் பிரான்சியர்என்னும் நான்கு சாதியினராலும் தெரிந்து நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளாவர்;இவர்களோடு யுத்தத்திலேசம்பந்தப்படாதசாதியாரிலும்நீதிபதிகள் சிலரைத்தெரிந்து நியமித்து விசாரணை நடத்தினல் நீதி அதிகங்கோடாதெனப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். மேலும் யுத்தக் குற்றம் பாரிக்கப்பட்ட ஜர்மனியர் மூவரை, நிரபராதிகளெனக் கண்டு விடுதலை செய்த விஷயத்தில் ருஷிய நீதிபதியாக விருந்தவர் அபிப்பிராயபேதப்படுகிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது; ஆனல் யுத்த ஆரம்பத்திலே ருஷியர் பிருத்தானியருக்கும் அமெரிக்கருக்கும் மாருக, ஹிட்லருக்குப் போர்த்துணையாக நிற்காதொழிந்திருந்தால், ஹிட்லர் இப்படியான கொடூர யுத்தத்தைச் செய்திருத்தல் முடியாதென்றும், இப்படியான உயிர்க் கொலையும் பெருஞ் சேதங்களும் அக்கிரமங்களும் நேர்ந்திருக்கமாட்டாவென்றும் அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிருர்களே; சுருங்கச் சொல்லுகில் நூரன்பேர்க் விசாரணை "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்ற முறையில் முடிந்த தெனலாம்.

மேலைத்தேசப் பெரியார் சிலர் இந்த நூரன்பேர்க் விசாரணையைக் கண்டித்துக் கூறியமை இப்பொழுது வெளிப்படலாயிற்று; பர்னுட்ஷோ என்னும் முதியார், நூரன்பேர்க் வழக்கு விசாரணை நடக்கும்போதே பின்வருமாறு கூறினரென "லண்டன் டெயிலி எக்ஸ்பிரஸ்" என்னும் பத்திரிகை வெளியிட்டுள்ளதாம்; அதன் சாரம் வருமாறு:—

"நூரம்பேர்க்கில் நடக்கும் ஜர்மனிய குற்றவாளிகளை விசாரணை செய்து அவர்களுக்குக் கொலைத்தண்டனை விதித்தற்கு ஐக்கிய ராச்சியப்பகுதி அதிகாரிகளுக்கு அதிகாரமில்லை யெனலாம்; நிரபராதிகளான இரண்டு ஊரவர்கள்மீது,எவ்வகையான எச்சரிப்புஞ் செய்யாமல் அணுக்குண்டு இட்டு அந்த ஊரவர்களை நாசப்படுத்திய ஐக்கிய ராச்சியத்தைச் சேர்ந்த நாங்கள் எவ்வகையான நியாயத்தைக் காட்டியும் ஜர்மனியரை யுத்தக் குற்றவாளிகளெனக் கண்டு தண்டிக்க நியாயமில்லையென்பது என்னுடையஅபிப்பிராயம்".

இனி, புதிய முறையாகிய இப்படிப்பட்ட விசாரணை நடத்தித் தண்டனை செய்வதனல் பகைவர் பயந்து இனிமேல் இவ்வாருன யுத்தத்திலே தலையிடமாட்டார்களென ஒருபோது ஐக்கிய ராச்சியத்தினர் எண்ணக்கூடும்; உயிரைப் பாதுகாக்க விரும்புபவன் யுத்தத்திற்கு ஒருபோதுந் துணியான்; இவர்கள் தம்முயிரைத் திரணமாக மதித்தே யுத்தஞ் செய்யத் தலைப்பட்டவர்களாவர்; யுத்தத்திற் புகுந்தவன்றே உயிர் போகுமென்பதை அறிவார்கள்; ஆனல் மானத்தோடு உயிரைப் போக்க வேண்டுமென்பதுதான் உண்மையான யுத்தவீரர்கள் கொள்கையாகும்; இந்த உலகத்தின் பெரிய நிர்வாகங்களெல்லாம் ஆண்டவனைப் பொறுத்தனவாகும். யுத்தம் நிகழ்வதையும் நிகழா தொழிதலையும் மனுஷன் நிர்வகித்தல் முடியாது; அப்படியாகுமெனில் மூன்றாம் உலக யுத்தமும் நேருமோவென எவரும் அஞ்ச வேண்டியதில்லை; மேலும், அபராதிகளெல்லோரையும் ஆண்டவன் கடைசி நாளில் தமது தெய்வநீதி மன்றத்தில் நிறுத்தி விசாரித்துத் தக்கபடி தண்டிப்பாரென்ற கொள்கை மேலைத்தேச வாசிகளிடத்தே யுண்டு; நீதி யநீதிகளை இறைவனெருவன் அறிவானேயொழியச் சின்னட் பல்பிணிச் சிற்றறிவினராகிய நாம் அறிதல் முடியுமா?

## காரைநகரிற் பிணக்கு

### சமரசமாகப் போவதன் அவசியம்

(ஸ்ரீதரன் எழுதுவது)

காரைநகரில் சலவைத் தொழிலாளர்க்கும் அங்குள்ள பிராமணர்க்குமிடையே பிணக்கு ஏற்பட்டிருப்பதாக அறிகிறேன். இந்தப் பிணக்கிற்கான காரணம், அதன் நியாயாநியாயம் என்பவற்றை ஆராய்தல் என்பவற்ருல் சமரசத்துக் கேதுவாகாது என்றே எண்ணுகின்றேன். இவ்விஷயத்தில் காரைநகர்ச் சைவமகாசபையினர் செய்துவந்த முயற்சிகள் இதுவரை பயன் அளிக்காமற் போனலும், இதனை இப்படியே விட்டுவிடாது. ஓர் சமரச முடிவுக்குக்கொண்டுவருதல் சமயோசிதமானது என்பதே நான் இவ்விஷயமாக ஆராய்ந்துகண்ட முடிபு. சலவைத் தொழிலாளர் சங்கமும் இவ்விஷயத்திலே பரந்த மனப்பான்மை கொண்டு நடத்தல்வேண்டும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்பிணக்கிற்கு ஆதிகாரணம் ஓர் சில பச்சோந்திகள் என்று அறிகிறேன். இவர்களுடைய கும்மாளம் இனியும் இருக்கவிடுதல் தமக்கே ஆபத்து என்பதைப் பிராமணரும், சலவைத் தொழிலாளரும் உணர்ந்து இவர்களை ஒதுக்கிக்கொள்ளுதல் நலம்.

இவ்விஷயத்தில் யாழ்ப்பாணம் பிராமணசமாஜமும் முயற்சி செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

## இந்தனேஷியாவுக்குச் சுயாட்சி

இதுகாறும் ஒல்லாந்தர் ஆட்சிக்குள் இருந்து, ஜப்பானிய ஆக்கிரமிப்பின் பின் சுயாட்சியைத் தாபித்த இந்தனேஷியா வாசிகளை மீண்டும் அடிமைக்குழியில் தள்ள ஒல்லாந்த அதிகாரிகள் செய்த சூழ்ச்சிகள் பலவும்அவலமாய்விட, இப்போது அவர்கள் இந்தனேஷியக் குடியரசு அரசினருடன் சமாதானம்பேசி வருகிருர்கள். இந்தனேஷியாவின் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டே, இப்போது நிகழும் பேச்சுக்கள் இருக்கும்.

## செனனுயக்காவுக்கும் போட்டி

மீரிகமத் தொகுதியில் தனக்குப் போட்டியிராது என்று மிஸ்ரர். டி எஸ். செனனுயக்கா இதுவரை எண்ணிக் கொண்டிருந்தனர். ஆனல் அப்படி அவர்க்குப் போட்டியில்லாமற் செய்வதில்லை யென்று இலங்கைச் சமசமாஜக் கட்சி தீர்மானித்துவிட்டது மிஸ்றர். செனனுயக்காவுக்கு எதிராக 'கொயிகம' வகுப்பை (வேளாள)ச் சேர்ந்த ஒரு சமசமாஜி போட்டியிடுவார்.

## காந்தி ஜெயந்தி

### நாடெங்கும் கூட்டங்கள்

அச்சுவேலி சுதந்திர இளைஞர் சங்கத்தாரால் காந்திஜெயந்தி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கிராமச் சங்கத் தலைவர் ஸ்ரீ T. தம்பிமுத்து பொதுக்கூட்டத்துக்குத் தலைமைவகித்தார். பண்டிதர் மயில்வாசனம் திரு. எஸ் கே கந்தையா திரு. S. வீரசிங்கம் முதலியோர் காந்தியடிகள்வாழ்க்கை சம்பந்தமாகப் பேசினர். கடித.

●

ஷை விழா காரைநகர்ச்சைவமகாயில் சென்ற 2-10-46 மிகவும் சிறப்புடன் கொண்டாடப்பட்டது. பொதுக்கூட்டத்துக்கு திரு. S. நவரத்தினம் M A தலைமைவகித்தார். காரைநகர் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் திரு A. தியாகராசா M. A. திரு வை. பொன்னுத்துரை, திரு A. சுப்பிரமணியம், இந்துசாதன உதவியாசிரியர் திரு அ. க. சுப்பிரமணியம் என்பவர்கள் சொற்பொழிவுகள்செய்தனர். கடித.

●

நிகழும் ஐப்பசித் திங்கள் 2ம்நாள் புதன்கிழமை பிற்பகல் $7\frac{1}{2}$ மணியளவில் பரமேஸ்வரக் கல்லூரி விடுதிச்சாலை மாணவர்கள் காந்தியடிகளது ஜனனதினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடினர். திருவாளர் E. கேதீஸ்வரநாதனின் தலைமையில் நடந்தது. திருவாளர்கள் S. சிவபாதசுந்தரம் M. A. (Cantab) அவர்களும், திரு T. இராசசேகரம் M. A அவர்களும் காந்தியடிகளைப் பற்றிப் பேசினுர்கள்;திரு P.S.R K.மேனன் B. Sc. (Hons) அவர்கள் தேசிய கீதங்கள்பாடினர். பின்னர் (இவ்விழாவிற்குக் காரணராகிய) காரியதரிசி திரு க. வேலாயுதர் நன்றி கூறியதும் தேவாரபாராயணத்தோடு கூட்டம் $10\frac{1}{2}$ மணியளவில் நிறைவெய்தியது கடித.

●

மேற்படி கொண்டாட்ட விழாவை கண்டி அம்பிட்டி இந்து தமிழ் வித்தியாசாலையில் மாணவர்கள் தேவார பாராயணத்துடன் ஆரம்பித்தார்கள். அவ்வமயம் மேற்படி பாடசாலைத் தலைமையாசிரியர் திரு சொ. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் மகாத்மா காந்தியடிகளின் படத்திற்கு விசேட பூசை செய்து, அவர்மீது இனிய பாட்டுக்களைப்பாடி அவரைப்பற்றிப் பிள்ளைகளுக்குப் புலப்படும்படி உபந்நியாசஞ் செய்தார். மாணவர்களும் அவர்மீது இனிய பாட்டுக்களைப் பாடினுர்கள். ஈற்றில் தேவார பாராயணத்தோடு விழா இனிது நிறைவேறியது. கடித.

## மா கொடுக்கப்படும்

வருகிற 13 10-46 திங்கட்கிழமை தொடக்கம் மாஊரவர்களுக்கு வழக்கம் போல விநியோகிக்கப்படும் என்று அறியலானேம்.

### தேகவியோகம்

ஸ்ரீமதி. பொன்மணி

யாழ்ப்பாணம் என். வைத்தியலிங்கம் அன்கொம்பனி மானேஜர் ஸ்ரீ V. மகேசன் அவர்களின் பாரியாரும் கொழும்பு, என். வைத்தியலிங்கம் கொம்பனியாரின் சொந்தக்காரர் ஸ்ரீ N. வைத்தியலிங்கம் அவர்களின் புதல்வியுமான ஸ்ரீமதி பொன்மணி சென்ற 1–10-46 இல் நவாலியில் உள்ள தமது இல்லத்திற்றனே அகால மரணமெய்தினர் இப்பெண்மணி சகல சுகுணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவோர் உத்தமி. இவரைப்பிரிந்து துயருறும் நாயகன், பெற்றுர், உற்றுர் என்பவர்களுடன் நாமும் அனுதாப முறுகின்றேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமதர்மிகள் கொடுக்கும் தலைவலி

## சேனனாயக்கா அஞ்சுவது யார்க்கு?

### சமதர்மிகளிடையே ஒற்றுமை வரும்

அப்படி வந்தால் நேரும் பல மாறுதல் | அதனைத் தவிர்க்க ஆற்றிவரும் சூழ்ச்சி

### எண்ணியபடியே எல்லாம் நடக்குமா?

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

இற்றைவரை இந்த இலங்கையில் 8 அரசியற் கட்சிகள் கிளம்பியிருக்கின்றன. அவையாவன: 1 ஐக்கிய தேசியக்கட்சி, 2 சுயராஜ்யக் கட்சி, 3 அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், 4 இலங்கைச் சமதர்மக்கட்சி, 5 இலங்கைச் சமசமாஜக்கட்சி, 6 போல்ஷிவிக்கட்சி, 7 ஜனநாயகக்கட்சி 8 இலங்கைத்தொழிற்கட்சி. இப்போது இவற்றின் தொகை 8 ஆக விருந்தபோதிலும், பாராளுமன்றத் தேர்தல் நெருங்க நெருங்க, இன்னும் பல கட்சிகள் முளைத்தாலும் நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை இந்த 8 கட்சிகளில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஒன்றுதான் வகுப்புப் பிரச்னையைத் தன் விசேஷஆதாரமாகக் கொண்டுள்ள தெனவும், ஏனைய கட்சிகள் வகுப்புப் பேதமற்று அகில இலங்கைக்கும் பொதுவான இராஜீய, பொருளாதார பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன வென்றும் கூறுவர் ஒருசாரார்.

O

**எதிர்க்கட்சி**

மேலே காட்டப்பட்டுள்ள 8 கட்சிகளில் ஐக்கியதேசியக்கட்சி என்பது, இன்று இலங்கையில் அதிகாரம் வகித்துள்ள அரசியல்வாதிகள் பலரை அங்கத்தவராகக்கொண்டுள்ளது, இன்று அரசாங்கசபை முதல்வராகவுள்ள மிஸ்ரர் சேனனாயக்காவைத் தலைவராகக் கொண்டுளளது. புதிய பாராளுமன்றத்தில் மிகப் பெரும்பான்மையான ஸ்தானங்களைக் கைப்பற்றி அரசியல் அதிகாரத்தை வகித்து நாட்டைப் பரிபாலிக்க இக்கட்சி கங்கணம்கட்டி நிற்கின்றது. ஐக்கிய தேசியக்கட்சி அதிகாரத்துக்கு வந்தால் இங்கிலாந்து முதலாம் ஜனநாயக ஆட்சிநடைபெறும் நாடுகளில் உள்ளவாறு இங்கேயும் ஓர் எதிர்க்கட்சி வேண்டாமா? அப்படியான எதிர்க்கட்சியாக விருப்பதே இலங்கை சுயராஜ்யக் கட்சியின் நோக்கமாம்: மோதகம் கொழுக்கட்டைக்கிடையில் எத்தகைய வித்தியாசம் உண்டோ அந்த வித்தியாசந்தான் இந்த இருகட்சிகளுக்கு மிடையில உண்டு என்றும் "நான் நோகாமல் அடிக்கிறேன், நீ ஓயாமல் அழு" என்றாங்கு, இந்த இருகட்சிகளும் பரஸ்பரம் தொடர்புடையனவாக இருக்கும் என்றும் விஷயமறிந்தவர்கள் கூறுகின்றனர்.

O

**நோக்கம் என்ன?**

புதிய அரசியற்றிட்டம் அமுலுக்கு வந்ததும் இலங்கையின் முதற்பிரதம மந்திரியாக வரவேண்டும் என்பதே மிஸ்ரர் சேனனாயக்காவின் லட்சியம் இந்த லட்சியத்தைப் பூர்த்தியாக்க அவர் ஐக்கிய தேசியக்கட்சியை ஸ்தாபித்தார் அன்றி, இந்தஇலங்கையின் அரசியல் பொருளாதார அமைப்பில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்து, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்நாட்டை உன்னத நிலைக்குக் கொண்டுவரும் எண்ணத்தினால் அல்ல. அப்படியான பரந்த ஞானம் அவர்க்குக் கிடையாது. அவர் பதினைந்து ஆண்டுகாலமாக இந்நாட்டில் அதிகார பதவியில் இருந்தும் இன்றும் இந்த இலங்கைமக்கள் பட்டினியாகத்தான் கிடக்கிறார்கள். இன்றும் அரை நிர்வாணத்துடன்தான் திரிகிறார்கள். இந்தப் பதினைந்து வருஷகாலமும் சாதிக்கமுடியாத கருமங்களை இனி இவர் சாதித்து முடிப்பர் என்றும் காத்திருத்தல் அவமாகும்.

O

**பிளவு நீடிக்காது**

மிஸ்ரர் சேனனாயக்காவின் ஆசை நிறைவேறுமா? இதற்குப் பலதடைகள் இருப்பதை மிஸ்ரர் சேனனாயக்கா அறியாமலில்லை. தென்னிலங்கையிலே அவரும் அவருடைய சகாக்களும் செய்துவரும் பிரசாரவேகத்திலிருந்து; ஐக்கிய தேசியக்கட்சி எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியீட்டும் என்றுசொல்வதற்கில்லை "மேலே காட்டிய கட்சிகளில் மிஸ்ரர் சேனனாயக்கா தமிழ்க் காங்கிரசிற்கோ, அல்லது சுயராஜ்யக் கட்சிக்கோ, அல்லது ஜனநாயகக் கட்சிக்கோ அல்லது சுயேச்சை வாதிகளாக வரும் அங்கத்தவர்களை யிட்டோ அவர் கலக்கம் கொள்ளவில்லை அவருடைய ஆசைகளை நிராசையாக்கத் தக்க ஒரேயொரு கட்சியையிட்டே மிகவும் கலக்கம் கொள்ளுகிறார். அக்கட்சிதான் சமதர்மத்தைத அடிப்படையாகக் கொண்டுள்ள அரசியற்கட்சி. இன்று இக்கட்சி மூன்றாகப் பிரிந்து பரஸ்பரம்மாறுபட்டுக் கருமம் ஆற்றுவது மிஸ்ரர் சேனனாயக்காவுக்கு ஓரளவில் ஆறுதல் கொடுக்கிற தென்றாலும், சமதர்மிகளிடையேயுள்ள பிளவு அதிககாலம் நிற்கமாட்டாரென்பதை அவர்மெல்ல மெல்ல உணருகிறார். டக்ரர் கொல்வின் R டீ. சில்வா. லெஸ்லி குணவர்த்தன என்பவர்களைத் தலைவர்களாகக்கொண்ட போல்ஷெவிக் லெனின் கட்சிக்கும், பிலிப்குணவர்த்தன டக்ரர் என். எம். பெரீரா என்பவர்களைத் தலைவர்களாகக் கொண்டுள்ள லங்க சமசமாஜக் கட்சிக்குமிடையே இப்போது ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது. இந்த இருகட்சிகளும் இனி ஒன்றுசேர்ந்து ஒரேகட்சியாக நின்று பாராளுமன்றத் தேர்தலிற் பங்கு பற்றும். மூன்றாவது கட்சியான இலங்கைச் சமதர்மக் கட்சியின் நிலைமை இன்னும் தெளிவாகவில்லை டக்ரர். எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ, ஸ்ரீ A. வைத்தியலிங்கம், பீற்றர் கெனமன், எம். ஜி. மெண்டிஸ் என்பவர்களைத் தலைவர்களாகக் கொண்டது. இந்த இலங்கைச்சமதர்மக்கட்சிக்குக் கொழும்பு நகரத்திலே ஓரளவுக்குச் செல்வாக்குண்டு. ஆனால், இவ்வளவு செல்வாக்கு மற்றும் இடங்களில் உண்டோ என்பதும் இப்போது சொல்வதற்கில்லை. எது எப்படி யிருந்தபோதிலும்: சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட இரு கட்சிகளுடனும் இலங்கை சமதர்மக்கட்சியும் ஒத்துழைக்கத் திரும் என்பதற்கான உற்பாதங்கள் இப்போது காணப்படுகின்றன.

O

**சேனனாயக்காவின் கவலை**

சமதர்மிகள் இப்போதே 40 க்கு மேற்பட்ட அபேட்சகர்களைத் தெரிந்துவிட்டார்கள். குறைந்த பட்சம் இன்னும் 40 பேரை அபேட்சகர்களாக நிறுத்தி வைக்கலாம். இந்த 80 பேரில் எத்தனைபேர் ஜெயமடையலாம்? இதனை நினைக்க மிஸ்ரர் சேனனாயக்காவுக்குத் தலைவலி இல்லாமற்போகாது இப்போது அரசாங்க சபையிலே, சமசமாஜிகள் சார்பாகவுள்ள அங்கத்தவர் பிலிப்பிரதிநிதி தகநாயக்கா மாத்திரமே! ஒரே ஒரு தகநாயக்கா இருந்துகொண்டு மிஸ்ரர் சேனனாயக்காவுக்கும் அவர் சகபாடிகளுக்கும் இவ்வளவு தலையிடி கொடுத்துப் பல சமயங்களில் மூச்சுத் திணறவும் வைப்பாரானால் அவரைப் போன்று இன்னும் சில சமதர்மிகள் பாராளுமன்றத்தில் நுழைந்துவிட்டால் சேனனாயக்காவின் கெதி என்னாகும்? இது ஓர் பெரும் பிரச்சினை! இதனை மிஸ்ரர் சேனனாயக்கா நன்கு அறிவார் எனவே, இப்படியான சமதர்மிகளை எப்படிப்பாராளுமன்றத்தில் நுழையாமற்செய்யலாம்? என்று மிஸ்ரர் சேனனாயக்காவும் அவருடைய சகாக்களும் ஆலோசித்து அதற்கான கருமங்களைச் செய்து வருவாரானால் அதில் நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை.

## கரவைச் சிற்றம்பல முதலியார் ஞாபகதினம்

### மாணிக்கவாசக, சரஸ்வதி விதாலயங்களில் பெற்றார் தினம்

மேற்படி விழா 2-10-46 புதன் கிழமை பி. ப 3 மணிக்கு சரஸ்வதி விதாலயத்திலிருந்து முதலியார் உருவப்பட அழைப்புடன் ஆரம்பித்து, மாணிக்கவாசக விதாலய மண்டபத்தைச் சேர்ந்து, பிற்பகல் 4 மணிக்கு முதலியார் திரு. க. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் பெருந்திரளான அபிமானிகள் சேர்ந்த கூட்டமொன்று ஆரம்பமாயது. வந்தனப்பா படித்துக் கொடுத்ததும் ஷை இரு பாடசாலைகளின் அறிக்கை தலைமையாசிரியர் திரு. க, சிற்றம்பலம் அவர்களால் வாசிக்கப்பெற்றது. தலைவர் உரை நிகழ்ந்ததும், முதலியார் செய்து வைத்த அரும் பெருந் தொண்டுகள்பற்றி திரு. G. G. பொன்னம்பலம் M. S. C. வடமராட்சி D. R. O. திரு. A. பெருமையினார் அவர்களும் சொற்பொழிவாற்றினார். வித்தியாதரிசினி கூல்ட் அம்மையாரால் இரு பாடசாலை மாணவர்கட்கும் பரிசில்கள் வழங்கப்பெற்றன. ஈற்றில் தலைமையாசிரியர் திரு. க. சிற்றம்பலம் அவர்கள் அனைவருக்கும் நன்றியுரை பகர கூட்டம் மாலை 6 மணியளவில் நிறைவெய்தியது.

—கடித

# வகுப்புவாதம் இல்லை

### என்கிறார் கொத்தலாவலை

இந்த இலங்கையிலே இப்போது வகுப்புவாதம் என்பது இல்லை அது பழைய சம்பவமாகிவிட்டது. இப்போது நாங்கள் செய்யவேண்டியது என்னவென்றால் எல்லாரும் பரஸ்பரம் ஒற்றுமைபூண்டு நாட்டின் நன்மைக்கான விஷயங்களைச் செய்வதேயாகும். அரசாங்கசபையிலே உள்ள மந்திரிமார் என்பவர்கள் பொதுஜன ஊழியர். அவர்கள் ஊரவர்க்கு எது எது வேண்டுமோ அது அதனைச் செய்ய ஆயத்தமாக விருக்கிறார்கள்"

இவ்வாறு சென்றவாரம் கரையூர் மீன்பிடி துறைமுகத்தைத் திறந்த போக்குவரத்துமந்திரி மிஸ்ரர் கொத்தலாவலை கூறினார்.

உள்நாட்டு மந்திரி திரு. அ. மகாதேவாவும் இந்த வைபவத்திற் சமூகமாயிருந்தார். கரையூர், பாஷையூர்ப் பக்கங்கள் இன்னும் கேவல நிலைமையிலேயே இருக்கின்றனவென்றும் அவற்றைத் திருத்துவதில் சகலரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

### பலஸ்தீன் மகாநாடு

பலஸ்தீனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டி, லண்டனில் பிரிட்டிஷ் அரசாங்கத்தாற் கூட்டப்பட்டுள்ள மகாநாடு எவ்வித முடிவும் செய்யாமல் தவணையிடப்பட்டிருக்கிறது. அதிற் சமூகமளித்த அராபியப் பிரதிநிதிகள் பலஸ்தீனத்தைத் துண்டாடும் பிரச்னையை மிகவும் பலமாக ஆட்சேபித்தனர். இவ்விஷயமாக அராபியர் ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்று தெரிகிறது. மகாநாடு இனி 23ம் திகதிக்குப்பின்னரே மீண்டும் கூடும்.

### கிறீஸில் முடியாட்சி

கிறீஸ் மன்னர் தமது நாட்டுக்கு மீண்டுவிட்டார். முடியாட்சிக் கட்சியினரைக் கொண்ட ஓர் மந்திரசபையை அவர் அமைத்துப் பரிபாலனம் புரிகின்றார் என்றபோதிலும் விஷயம் அவ்வளவு சுலபத்தில் தீர்ந்துவிடும் போலத் தோன்றவில்லை. மன்னராட்சியை வெறுக்கும் புரட்சி இயக்கத்தினர் பல இடங்களிற் கலகங்களைக் கிளப்பி அரசாங்கத்துக்கு இடையூறுகள் விளைத்து வருகின்றனர்.


கோண்டாவில்

**நெட்டிலுப்பாய் பிள்ளையார் கோவில்**

மேற்படி கோவிலில் வழிபடுவோரின் மகாசபைக் கூட்டம் ஒன்று வியவருடம் புரட்டாதி மாதம் 4ந் திகதி (20-9-46) வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு கூட்டப்பட்டு ஒரு விஷயமும் செய்ய முடியாமற் போய்விட்டபடியால் விய வருடம் ஐப்பசி மாதம் 9ந் திகதி (25-10-'6) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கூட்டப்படும்.

விஷய அட்டவணை

1 அடுத்த மூன்று வருடத்திற்கு மேற்படி கோவிலைப் பரிபாலித்தற்கு வேண்டிய அதிகாரசபை ஒன்று (Managing Committee) தெரிதல்.

2 வேறு விஷயம்.

மேற்படி கோவிலில் வழிபடுவோர் யாவரும் தவறாது சமூகமளிக்கும்படி தயவாக வேண்டப்படுகின்றனர்.

சு. மார்க்கண்டு

Mis 188 8-10-46

**விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிமாலங்காரம்

(அச்சுவேலி, சிவஸ்ரீ ச குமாரசுவாமிக் குருக்கள்)

பரமசிவன் ஆன்மாக்களுக்கு அருள்செய்யு நிமித்தமாகக் கொண்டருளிய சுத்த தத்துவங்கள் சிவம் சாதாக்கியம் மகேசுவரம் என மூன்றும். அவற்றுள், அருவத் திருமேனியாகிய சிவவடிவம் ஒன்று; அருவுருவத் திருமேனியாகிய சாதாக்கியம் ஐந்து: உருவத் திருமேனியாகிய மகேசுவரம் இருபத்தைந்து; ஆக மூர்த்தங்கள் முப்பத்தொன்றும். அருவம் நிஷ்களமென்றும், அருவுருவம் சகள நிஷ்களமென்றும், உருவம் சகளமென்றும் சொல்லப்படும்; சகள மூர்த்திபேதங்கள் இருபத்தைந்தனுள், சோமாஸ்கந்தர், சபாபதி, இடபாருடர், சந்திரசேகரர், கல்யாண சுந்தரர் என்னும் மூர்த்திகள் சதாசிவ மூர்த்தியினுடைய ஈசான முகத்தில் தோன்றினர், தற்புருஷ முகத்தில் பிக்ஷாடனர், காமாரி, காலாரி, சலந்தராரி, திரிபுராரி என்னும் மூர்த்திகள் தோன்றினர். அகோர முகத்தில் கஜாரி, வீரபத்திரர், தக்ஷிணாமூர்த்தி, கிராதர், நீலகண்டர் என்னும் மூர்த்திகள் தோன்றினர். வாமதேவ முகத்தில் கங்காளர், சக்கரதானர், கெசமுகாநுக்கிரகர், சண்டேசாநுக்கிரகர், ஏகபாதர் என்னும் மூர்த்திகள் தோன்றினர். சத்தியோஜாதமுகத்தில் இலிங்கோற்பவர், சுகாசனர், உமாமகேசுவரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுவரர் என்னும் மூர்த்திகள் தோன்றினர். சிவபெருமான் இம்மூர்த்தங்களைக் கொண்டதற்குக் காரணம் துட்டர்களை நிக்கிரகித்தற்கும் சிட்டர்களை அனுக்கிரகித்தற்குமேயாம். திருநாவுக்கரசு சுவாமிகள் தனித் திருக்குறுந் தொகையில் "இரண்டுமாமவர்க்குள்ளனசெய்தொழில்' என்று திருவாய் மலர்ந்தருளுகின்றார். நிக்கிரகம் அனுக்கிரகம் என்பனவே இக் குறுந்தொகையில் இரண்டுதொழில் எனப்பட்டன

சோமாஸ்கந்தர், சுகாசனர், கல்யாண சுந்தரர், சந்திரசேகரர், கங்காதரர் என்னுமைந்தும் சிருஷ்டி மூர்த்திகளென்றும்: இடபாருடர், அர்த்தநாரீசுரர், கிராதர், வீரபத்திரர், பிக்ஷாடனர் என்னுமைந்தும் திருமூர்த்திகள் என்றும், நடேசர், காமாரி, காலாரி, கஜாரி, திரிபுராரி, ஜலந்தராரி என்னுமாறும் சங்கார மூர்த்திகளென்றும் வீரதந்திரம் என்னும் சைவாகமம் செப்புகின்றது. இவை ஷோடச மூர்த்தமெனப்படும்.

சிவபெருமானோடு பிரிப்பில்லாத வல்லமையே உமாதேவி மூர்த்தமாம். துர்க்கை இலக்குமி சரஸ்வதி முதலியவை சிவசக்தியாற்றாப்பட்ட திருமூர்த்தங்களாம், விக்கிநேசுவரரும் சுப்பிரமணியரும் சிவகுமாரர் எனப்படுவர். புஷ்பமும் புஷ்பத்தினது மணமும் நிறமும்போலச் சிவபெருமானும் சிவசத்தியும் சிவகுமாரரும் எண்ணப்படுதல் சைவநூற்றுணிபாம் ஆகையினால் அவர்களுக்குப் பேதமில்லையென்பது பெறம்படுகின்றது. இவையேயன்றி இன்னும் பலப்பல வடிவங்களைத் தாங்கி இறைவன் ஆன்மாக்களுக்கு அநுக்கிரகம் செய்கின்றார். இறைவன் கொண்ட இத்திருமேனிகள் போகவடிவம், கோரவடிவம், யோகவடிவம் என்று மூன்று பேதமாம். அவற்றுள் போகவடிவம் உயிர்களுக்குப் போகம் புரிதற்பொருட்டும், கோரவடிவம் உயிர்கள்செய்த வினையைக் கெடுத்தற் பொருட்டும். யோகவடிவம் உயிர்களுக்கு யோக முத்தி உதவுதற்பொருட்டுமாம், கல்யாணசுந்தரர் முதலான வடிவங்கள் போக மூர்த்தங்களாம். வீரபத்திரர் முதலானவை கோரமூர்த்தங்களாம்; தக்ஷிணாமூர்த்தி முதலானவை யோக மூர்த்தங்களாம்.

இத் திருமேனிகளுட் சில நின்ற ரூபமாக அமைந்துள்ளன. சில நிருத்தரூபமாக அமைந்துள்ளன; சில இருக்கும் வடிவாகப் பொருந்தியுள்ளன. திருமாலுக்குச் சயனம் உசிதம் எனச் சுப்பிரபேதம் கூறும்.

இந்த மூர்த்திபேதங்களை ஆலயங்களிலே சிவாகம விதி வழுவாது பிரதிஷ்டை செய்து நித்திய நைமித்திகங்களை நடத்திவருதல் ஆன்றோர் வழக்குப், சாத்திர சம்மதமுமாம். இறைவனுக்குச் செய்யும் உபசாரங்கள் பலவாம், கிரீடம் குண்டலம் முதலாம் ஆபரணங்களாலும் வஸ்திரம் புஷ்பமாலை முதலியவைகளாலும் அங்கங்களை அலங்கரித்தலும் அவ்வுபசாரங்களுட் சேர்ந்ததாம். உற்சவ காலங்களிலே இம்மூர்த்தங்களை அலங்கரித்துப் பூசித்துத் திருவுலாக் கொண்டருளச் செய்தல் சிறந்த சிவபுண்ணியமாம். சுவாமியை அலங்காரஞ் செய்பவர்கள் மூர்த்தங்களுக்கு யோக்கியமான வஸ்திரங்களாலும், யோக்கியமான மாலைகளாலும் அணிகளாலும் அவைகளை அலங்கரிக்க வேண்டும் என்று வீரதந்திரம் கூறுகின்றது. ஒரே நிறமானபுஷ்பங்களாற்றொடுக்கப்பட்ட மாலை உத்தமமாம், பலநிறப் பூக்களாற்றொடுக்கப்பட்ட மாலை மத்திமமாம். பூக்களாலும் பத்திரங்களாலும் கட்டப்பட்ட மாலை அதமமாம். கடவுளை அலங்கரிக்கும் வஸ்திரமானது பட்டாயிருப்பின் உத்தமமாகும். பட்டு வஸ்திரம் கிடைக்காதாயின் பருத்திவஸ்திரமும் கொள்ளத்தக்கதாம். நெருப்புப் பட்டதும், மயிரோடு கூடியதும், எலி கடித்ததும். கிழிந்ததும், புராதனமானதுமாகிய வஸ்திரங்களைச் சுவாமியின் திருமேனியிற் சாத்துதல் கூடாது. இது காலோத்தரம் சகச்சிரம் என்னும் ஆகமங்களின் கருத்தாம்.

இவ்வுண்மையை அறியாத அநேகர் திருவிழாக் காலங்களிலே தாம் விரும்பியபடி, பொய்க்கால்கைவைத்துக்கட்டி, கிழிந்த வஸ்திரம், அழுக்கு வஸதிரம் தாம் உபயோகிக்கும் தலையணை முதலியவற்றாலும்கடுதாசிமாலை ஓலை மாலை முதலியவற்றாலும் அலங்கரிக்கிறார்கள்.

நிற்கும் மூர்த்திகளை நின்ற ரூபமாகவும், நடராஜமூர்த்தியை நிருத்தரூபமாகவும், இருக்கும் மூர்த்திகளை அந்த வடிவாகவும், சயன மூர்த்திகளை சயனாகிருதியாகவும் அலங்கரித்தால் அரசன் வெற்றியடைகிறான். சனங்கள் சுகமடைதற் கேதுவாகும் என்று காமிகாகமத்திலும், மூர்த்திகளைச் சுயரூபமாகஅலங்கரித்துத் தரிசித்தால் அதற்கேற்ற பலனுண்டாகுமென்று தேவிகாலோத்தரத்திலும் கூறப்பட்டுள்ளன.

சுவாமியை அலங்கரிப்பவர்களுள் அநேகர் நிற்கும் மூர்த்திகளைச் சயனாகிருதியாய் அலங்காரம் பண்ணுகிறார்கள். நிற்கும் மூர்த்திகளை இருக்கும் வடிவாகவும் அலங்கரிக்கிறார்கள். இதுபோன்ற அலங்காரங்கள் விபரீதக் கிரியைகளென்று சொல்லப்படும். விபரீத செயல்களால் விபரீத பயனுண்டாகு மென்பதிற் றடையில்லை, உபயக்காருட் பெரும்பாலாரும் சிவாபராதமாகிய இத் தீய செயலுக்குப் பொருள் கொடுத்து உதவியாளராகின்றனர். சாத்திரங்களுக்குவிரோதமாக மூர்த்திகளை அலங்கரித்தாற் கோயில் எசமானுக்கும், உலகத்துக்கும் கெடுதியுண்டாகு மென்பதை மேல்வரும் பிரமாணங்களால் நன்கு அறிந்துகொள்ளலாகும். (வளரும்)

## இலங்கைப் பிரதிநிதிகள் சபை
## வாக்காளர் இடாப்புகளின் விற்பனை

1946-ம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தெரிவு) சம்பந்தமாய இராசசபைச் சட்டத்தின் 11(2)ம் பிரிவின்படி பார்வையிட வைக்கப்படும் வாக்காளர் ஆரம்ப இடாப்புகளின் ஒரு சில பிரதிகள் உரிய காலத்தில் விற்பனைக்குக் கிடைக்கும். ஒரு பிரதி 15 ரூபா வீதமாக சம்பந்தப்பட்ட தெரிவுப் பகுதியின் பதிவு காரியஸ்தருக்கு 1946ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19ந் தேதிக்கு முன பிரதிகள் தேவைப்படுவோர் பணம் அனுப்பி விண்ணப்பஞ் செய்யவேண்டும். ஒரு இடாப்பிலேயே சம்மதிச் சீட்டிடும் தனித்தனி வட்டாரங்களுக்கிணங்க பங்கு பங்காகப் பிரிக்க முடியும். அத்தகைய பங்குகள் அவ்வவ் இடப்பரப்பிலுள்ள தபாற் கந்தோர்கள், உப தபாற் கந்தோர்கள் காரியாதிகாரி கந்தோர்கள், கிராமத் தலைமைக்காரர் கந்தோர்களில் பொதுஜனங்கள் பார்வையிடுதற்காக வைக்கப்படும். மேலும் முழு இடாப்பும் பார்வையிடுதற்காகப் பதிவு காரியஸ்தர் கந்தோரில் வைக்கப்படும்,

2 முடிவான (அதாவது உறுதிப்படுத்தப்பட்ட) இடாப்புப் பிரதிகளுக்கு, சம்பந்தப்பட்ட தெரிவுப பகுதிப் பதிவு காரியஸ்தருக்கு 1946–ம் ஆண்டு நொவம்பர் மாதம் 30–ந் தேதிக்குமுன் முற கூறிய விலைப்படி பணம் அனுப்பி விண்ணப்பஞ் செய்யவேண்டும். இந்த இடாப்புகள் ஏற்கெனவே அச்சிடுவதற்கு ஒழுங்குகள் செய்யவேண்டுமாதலின், குறித்த திகதிக்குப்பின் விண்ணப்பங்களை ஏற்க முடியாது ஏகவிட நேரிடும். கூடிய வரையில் ஒவ்வொருவரின் தேவைகளையும் திருப்தி செய்யவே முயற்சிகள் செய்யப்படும் ஆனால் காகிதநிலை மட்டாயிருப்பதாலும் மற்றும் பல அசந்தர்ப்பங்களாலும் கேட்கும் முழுத் தொகையும் கிடைக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

3 வெவ்வேறு தெரிவுப் பகுதிகளுக்குரிய ஆரம்ப, உறுதிப்படுத்தப்பட்ட இடாப்புகள் வெவ்வேறு தேதிகளில் வெளிவரும். இடாப்புகள் கொடுப்பதற்குத் தயாரானதும் பதிவுகாரியஸ்தர்கள் விண்ணப்பக்காரர்களுக்குஅறிவிப்பார்கள்

ஈ. ஆர். சட்பேரி,
பாராளுமன்றத் தெரிவுக் கொமிஷனர்
தபாற்பெட்டி இல. 705
கொழும்பு, 1946 ம் ஆண்டு
ஒக்ரோபர் மீ 4 உ

G 85—8-10-46

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோடு

உரும்பராய் பொன்னம்பலம் இரத்தினம், வழக்காளி

இல. 2227

விரோதமாக

1 உரும்பிராய் வேதவனம்கைம்பெண் பாறுபதிடம்
2 உரும்பிராய் வேதவனம் பொன்னுத்துரையும் எதிரிகள்

மேற்குறித்த கோட்டு இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கமிஷன் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படுங் காணி 1946-ம் ஆண்டு ஒக்ரோபர் (ஐப்பசி) மீ 30 ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு, கோப்பாய் கோவிற்பற்று, உரும்பிராயிறை "கொழுவாப்புலம்" நில பா 8ம் வீடும், வான் செய்பயிர்களும், பனைகளும், வளர்வடலிகளும். எல்லை கிழக்கு இளையதம்பி முத்துக்குமாருவின் ஆதனம். வடக்கு இளையதம்பி முத்துக்குமாருவுக்கும், ஆறுமுகம் பெண் திலகவதிக்கும், இராசையாபெண் நல்லம்மாவுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு ஒழுங்கை. தெற்கு ஆறுமுகம் தம்புவின் ஆதனம். இதடங்கலும், தெற்கெல்லைக் காணியின் தென்கிழக்கு மூலையில் இருக்குங் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால்ப் பாவிப்புரித்தும்

பெ முத்துத்தம்பி
வெத்தீஸ் கமிஷனர்

சுதுமலை தெற்கு மானிப்பாய்
1946 ம் ஆ செப்டெம்பர்
(புரட்டாதி) மீ 30 உ

Mis 187 8 10 46

## திருச்சி ரேடியோ

### செவ்வாய் அக் 8

காலை 71-5 கிதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 வட்டனூர் டி எஸ் மதுரம் சகோதரிகள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புரந்தாதாஸர் சாகித்யங்கள் இசைத்தட்டு 8-30 டி வி சிவசிதம்பரஐயர் புல்லாங்குழல் 9 முடிவு

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 வட்டனூர் டி எஸ் மதுரம் சகோதரிகள் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2-05 வட்டனூர் டி எஸ் மதுரம் சகோதரிகள் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 பந்தணைநல்லூர் எஸ் ராஜாயி பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சினிமா மெட்டுகள் இசைத்தட்டு 7.15 டி வி சிவசிதம்பரஐயர் புல்லாங்குழல் 7.30 தமிழில் செய்திகள் 7-45 சமாதான அமைப்பில் . பேச்சு 8 மதராஸில் உள்ளபடி (புனர் ஜன்மம் நாடகம்) 8 30 பந்தணைநல்லூர் எஸ் ராஜாயி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10.30 முடிவு.

### புதன் அக் 9

காலை: 7-15 கிதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 என் ஷண்முக ரத்னம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வானொலி வாத்யகோஷ்டி 8-30 ஏ சாவித்திரி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஏ சாவித்திரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 ஏ சாவித்திரி பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2,45 முடிவு.

மாலை: 5 பந்தணைநல்லூர் முத்தையா பிள்ளை வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சினிமா கானம் இசைத்தட்டு 7.30 தமிழில் செய்திகள் 7-45 கமது தபால்பெட்டி 8 என் ஷண்முகரத்தினம் பாட்டு 8-30 பந்தணைநல்லூர் முத்தையா பிள்ளை வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஐரோப்பிய சங்கீதம் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஆங்கிலப் பேச்சு 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வியாழன் அக் 10

காலை 7.15 கிதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 எஸ் ஜபா என் பூ... பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 நாகஸ்வரம் இசைத்தட்டு 8.30 ஸ்ரீ வலைய கே ராமச்சந்திரஐயர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஸ்ரீ வாஞ்சியம் கே ராமச்சந்திர ஐயர் பாட்டு 2 தமிழில், செய்திகள் 2.05 ஸ்ரீ வாஞ்சியம் கே ராமச்சந்திர ஐயர் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 காஞ்சிபுரம் எம என் வெங்கடவரதன் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 எஸ் ஜபா, எஸ் ஸ்ரீ பாட்டு 7.15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 பன்னிர்குடி சாவித்திரி அம்மாள் கோட்டுவாத்தியம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 தகசிணாங்கபூச்சி 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9 45 காஞ்சீபுரம எம் என் வெங்கடவரதன் பாட்டு 10-30 முடிவு.

### வெள்ளி அக் 11

காலை 7.15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 சுவாமிமலை எஸ் கல்யாண சுந்தர தேசிகர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 வி பி ராஜேஸ்வரி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சரோஜா ராஜரத்னம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 சரோஜா ராஜரத்னம் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 செம்பொன்னார் கோயில் ஆர் ஜி கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை, ஆர் குஞ்சிதபாதம் பிள்ளை நாகஸ்வரம் 5-40 குழந்தைகள் ஷோ 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 மீரா இசைத்தட்டு 7.15 ராணுவத்திலிருந்து திரும்பியவருக்கு பேச்சு 7-30 தமிழில்செய்திகள் 7.45 வாத்ஸல்ய சாரம் பேச்சு 8 செம்பொன்னார் கோயில் ஆர் ஜி கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை ஆர் குஞ்சிதபாதம் பிள்ளை நாகஸ்வரம் 8-30 சுவாமிமலை எஸ் கல்யாணசுந்தர தேசிகர் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்திகள் 9.15 எம் என் நடராசபிள்ளை புல்லாங்குழல் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 உலகவிவகாரங்கள் 10 இசைவேளை 10-30 முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் வேண்டுகோள்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை இற்றைக்கு 58 வருடங்கட்கு முன்னர் ஸ்தாபிதமானது. இதன் அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா வருகிற 1948-ம் ஆண்டு நிகழும். இந்த 60-ம் ஆண்டுப் பூர்த்தி விழாவிற்கு முந்தியே, இச்சபையின் நோக்கங்களையும் இயன்றவரை பூர்த்திசெய்தற்காகிய ஸ்தாபனங்களை யமைத்தல் வேற்புடைத்தாகும்; இச்சபை ஆற்றிவரும் பல்வகைத் தொண்டுகளையும் இருந்து செய்தற்குச் சபைபேரில் ஒரு சிறந்த காரியாலயம் ஆவசியகம் அமைக்கப்படுதல் வேண்டும்; காலந்தோறும் குருபூசைகள் செய்தற்கும், சமயபாட வகுப்புக்கள்வைத்து நடத்துவதற்கும், பிரசங்கங்கள் காலந்தோறும் செய்யப்படுதற்கும், இன்னும் வேண்டிய காலங்களிற்கூட்டங்கள் கூடுவதற்கும், இன்னும் புத்தகசாலை, சபையாரால் அழைக்கப்படும் பெரியார் யாரும் தங்குவதற்கும், சந்தியாவந்தனம், ஆன்மார்த்த பூசை, தெய்வவழிபாடு என்னுமிவைகளைச் செய்தற்கும் இன்ன பிறவற்றிற்குமாகிய மண்டபங்கள், அறைகள் முதலியனவற்றைக் கொண்ட ஒரு பெரிய ஆசிரமம் அமைக்க வேண்டுமெனவும், இப்படியமைத்தற்காகிய விஸ்தாரமுள்ள நிலத்தை இப்பொழுது விலைக்குவாங்கிக் கருமங்களை உடனே தொடங்குதல் வேண்டுமெனவும், சென்றமாசங்கூடிய சைவபரிபாலன சபை வருடாந்த மகாகூட்டத்தில் நிர்ணயிக்கப்படலாயிற்று.

மேற்படி நிர்ணயத்தின் பிரகாரம் சென்றஞாயிற்றுக்கிழமை(22-9-46) கூடிய நிர்வாகசபைக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலைக் கணித்தாக, நீராவியடி நாற்சந்தியின் மருங்கில் பத்துப் பரப்புவரை கொண்ட நிலம் வாங்குதற்காகிய ஒழுங்குகள் செய்யப்படலாயிற்று; மேலே சொல்லப்பட்ட நிலத்தை வாங்குவதற்கும், சிறந்த ஆசிரமத்தை அமைப்பதற்கும் ஒருலட்சம் ரூபாவரையில் தேவையென மதிப்பிடப்பட்டிருக்கின்றது; சபைகுறித்த நிதியின் பொருட்டுச் சைவாபிமானிகளாயுள்ள ஒவ்வொருவரும் தங்கள் தங்களாலியன்ற பணவுதவி செய்ய வேண்டுமென, இச்சபையின்பேரால் நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறோம். மேலும் மனமுவந்து பணமுதவும் அபிமானிகளின் பெயருந் தொகையும் விபரமும் காலந்தோறும் இந்துசாதன ஆங்கிலதமிழ்ப் பிரசுரங்களில் வெளிவருமெனவுந்தெரிவிக்கின்றோம். பணம் அனுப்பும் அன்பர்கள்,

கௌரவ காரியதரிசி, சைவபரிபாலனசபை C/o இந்துசாதனம் வண்ணார்பண்ணை என்ற விலாசத்திற்கு அனுப்பலாகும்.

இங்ஙனம்
இ. சிவகுருநாதர்
ஐ வ. குலசிங்கம்
கா சண்முகம்
அ. அருளம்பலம்
மு. மயில்வாகனம்
ஷை சபை வைரவிழாச் சபையார்க்காக

## 25000 நஷ்டஈடு

வடபஸ் கொம்பனிக்குரிய ஓர் பஸ்ஸில் தாம் பிரயாணஞ் செய்தபோது ஓர் விபத்து நேர்ந்ததால் தமக்குத் தேக ஊறும் மனஞ் சஞ்சலமும் ஏற்பட்டன என்றும், அவற்றின் பொருட்டு ஷை கம்பனி 25000 ரூபா நட்டஈடு அளிக்கவேண்டும் என்றும் பண்டைத்தரிப்பில் வர்த்தகராயுள்ள ஸ்ரீ S. கணேசரத்தினம் என்னும் வாலிபர் யாழ்ப்பாணம் நீதிஸ் தலத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

குறித்த பஸ்ஸின் சாரதியின் பாரமுகத்தால் இந்த விபத்து ஏற்படவில்லை: எனவே நட்டஈடு கொடுக்க எதுவில்லை யென்று பஸ்கொம்பனி மறுமொழி கொடுத்திருக்கிறது.

விசாரணை வருகிற 28-ந் திகதிக்குத் தவணையிடப்பட்டிருக்கிறது.

கடிதம்

## பேதம் ஏன்?

ஐயா,

இன்று நம் நாடு இலவசக் கல்வியைப் பெற்றுள்ளதெனின் மிகையாகாது. இக்கல்வியும் வறியவர் செல்வந்தர் என்ற பேதத்தை முற்றாகத் தவிர்க்கின்றது. எல்லாரும் ஒரே வகைக் கல்வியைப் பெறக்கூடியதாக அமைந்துள்ளது போற்றுதற்குரியதாகும். இத்துடன் இக்கல்வி நிற்கவில்லை. மத்திய கல்லூரிகளுக்கும் (Scholarships) மாணவர்களைப் பரீட்சை வைத்துத் தெரிந்தெடுத்துப் பயிற்சியளிக்கிறார்கள். உடை, உணவு கல்வி அரசினரால் இன்று உபகாரமாக வழங்கப்படுகின்றனவென்றால் கல்வி மந்திரியாரதும், கல்விப் பகுதியாரினதும் முற்போக்குத் தானென்ன?

இஃதிவ்வாறாகத் தமிழாசிரிய கலாசாலைக் கல்வியைச் சிறிது நோக்குவாம். அங்கும் உடை, உணவுக்கோ அன்றேல் புஸ்தகம் உபகரணம் ஆதிய செலவுக்கோ ரூபா. 30 மாதமொன்றுக்கு வழங்கப்படுகின்றது. கல்விப்பகுதியாரின் பெருந்தன்மை தானென்ன? இக்கொள்கையையுடையவர்கள் உபகாரப் பணம் ரூபா 20 ஒருசில மாணவர்களுக்குத்தான் (அரசினராசிரிய மாணவர்களுக்கு) வழங்குகிறார்களென்றால் எவரும் மனவருத்தப்படாதிரார். கல்விப் பகுதியார் எங்கள் தந்தை போன்றவரெனின் எவரும் மறுக்கமுடியாது. இங்ஙனமிருப்பவர்கள் தங்கள் சேய் என்ற வரிசையில் இருக்கும் மாணவர்களுக்கு ஒரே கண்காணிப்பைக் காட்டவேண்டியது கடமையல்லவா? அல்லாமலும் அரசினர் நடாத்திய பரீட்சைக்கே சென்று, அவர்களின் தெரிவின்படியே கலாசாலைகளுக்குச் சென்று சகல ஆசிரியமாணவர்களும் பயிற்சி பெறுகிறார்கள். இம்முறையிலும் ஆசிரிய மாணவர்களிற் பேதங் கிடையாது. என்ன காரணங்கொண்டோ இவ்வுபகாரப் பணம் ரூபா 20 எல்லா ஆசிரிய மாணவர்களுக்கும் வழங்காது ஒருசிலர் பெறவைத்திருக்கிறார்கள். தயவுசெய்து கல்வி மந்திரியவர்கள் கருணைபுரிவாராக.

இவ்விஷயத்தைப் பற்றிச் சகல ஆசிரிய மாணவர்களும் முகாமைக்காரர்களும் கல்விமந்திரியாரும் கல்விப் பகுதியாருக்கும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதற்கொரு முடிவையுங் காணவில்லை. ஆசிரிய கலாசாலைப் பரிசோதகர் கலாசாலையைப் பார்வையிட வந்த காலத்தில் அதிபர்களுக்கு இதுவிஷயம் கவனத்துக்கெடுப்பதாகச் சொல்லிப் போந்தார். அதன்பின்பும் எதுவும்நிகழ்ந்ததாகக் காணோம்.

இனியாவது எங்களில் வித்தியாசமில்லா திருக்கக் கருணைபுரியுமாறு கல்விமந்திரி யவர்களையும் கல்விப் பகுதியாரையும் வேண்டுகின்றோம். உபகாரப்பணம் ரூபா 20 எல்லா ஆசிரிய மாணவர்களும் பெறும் வழியை நல்குமாறு மீண்டுந் தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

(ஆசிரிய மாணவன்)

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

மாலய னெழிலி மேலோன் வானவ ரேனோர் யாரும்
பாலுள மரனும் மாவும் பறவையும் பிறவுஞ் சூழ
ஏலுறு குமரன் கஞ்சத் திருந்தது பரம ஞாதிக்
காலையி னுயிர்க ணல்கிக் கமலமே லிருத்தல் போலும்.

திருமால் பிரமதேவர் மேகவாகனனாகிய இந்திரன் மற்றைய தேவர்கள் ஏனையோர் எவரும் அயலிற் சூழ்ந்து நிற்ப, மரங்கள் மிருகங்கள் பறவைகள் ஏனைய உயிர்களாதியன வெல்லாம் பக்கலிலே சூழ்ந்துற, திருவுளக்கிளர்ச்சியோடு கூடிய குமரமூர்த்தி செந்தாமரைப் பூவின்கண்ணே யெழுந்தருளிய தன்மையானது, பரம்பொருளாகிய சிவபிரான் உலகத்தைப் படைத்தலாகிய ஆரம்ப காலத்திலே உயிர்களைப் படைத்துக் கமல பீடத்தில் எழுந்தருளியதை நிகர்க்கும் என்பது கருத்து.

இறைவன் படைத்தற்றொழிலைச்செய்யும் ஆரம்பத்திலே பதுமபீடத்திலிருந்து சராசரங்களை ஆக்குவோனெனவும் அவைகள் தோன்றி இறைவனைச் சூழுமெனவுஞ் சொல்லப்படுதலின், அது போலவே இங்குக் குமரமூர்த்தியும் அரிபிரமேந்திராதி தேவர்கள் முனிவர்கள் ஏனைய இயங்கியற்பொருள்கள் நிலையியற் பொருள்கள் சூழக் கமலப்போதில் எழுந்தருளியிருந்தாரென்றபடி; ஏனோர்-முனிவர் முதலானோர்; பிறவும்-ஊர்வன நீர்வாழ்வன வாதியனவும். நூறுந் திருவிருத்தந் தொடக்கம் இத் திருவிருத்தமிறுதியாகவுள்ள நான்கு திருவிருத்தங்களும் முருகமூர்த்தியைச் சிவபிரானுக்கு ஒப்பாக வைத்து வர்ணித்துக் காட்டியவாறும்

[ஏலுறு குமரன் - (சூரனாதியரை வதைத்துத் தேவர்கட்கு உரிய ஐசுவரியங்களைக் கொடுத்தலில்) உள்ளக்கிளர்ச்சி பொருந்திய குமரன்: சிருட்டி செய்வோர்க்குப் பீடம் பதும பீடமாதலின் "பரமனாதிக் - காலையி னுயிர்க ணல்கிக் கமலமேலிருத்தல் போலும்" என்றார்] (103)

சலங்கிளர் தரங்கத் தெய்வச் சரவணக் கமலப் போதில்
நலங்கிளர் குமரன சேர்தல் நான்முகற் சிறையில் வீட்டிப்
புலங்கிள ருயிர்க ணல்கப் பொருந்துநற் பகலின் முன்னம்
இலங்கெழிற் பதும பீடத் தேறிய வியற்கை போலும்.

நீரினின்றும் பெருகும் திரைகள் மறிகின்ற தெய்வத்தன்மை பொருந்திய சரவண வாவியிலேயுள்ள செந்தாமரைப் பூவினில் ஞானசொரூபியாகிய குமரமூர்த்தி எழுந்தருளியிருத்தல் (எதனை நிகர்க்குமெனின்) நான்கு முகங்களையுடைய பிரமதேவரைச் சிறைபிலிட்டு, ஆதாரமாகிய உலகத்தையும் அதன்கணுள்ள உயிர்களையும் தாமே ஆக்குதற்கமைந்த அந்த மங்கல தினத்திற்கு முந்தியே அழகுவிளங்குகின்ற தாமரைப் பூவாகிய பீடத்தின் கண்ணே எழுந்தருளிய தன்மைபோலாகுமென்பது கருத்து.

சலங்கிளர் தரங்கமென்றதனாலே வாவியின் நீர்ப்பெருக்கம் கூறியவாறும்: தெய்வ என்பதைச் சரவணம் கமலப்போது என்னும இரண்டினோடுந் தனித்தனி கூட்டிப் பொருள் கொள்க. குமாரக்கடவுள் எழுந்தருளிய காரணத்தினால் தெய்வத்தன்மை பெற்றன வென்றபடி. வீட்டி - இங்கே இட்டு; பிரமா செய்யுஞ் சிருட்டியைக் காட்டிலும் குமரவேள் செய்யுஞ் சிருட்டி ஆன்மகோடிகட்கு இதம் பயக்குமாதலின் அந்நாளை நற்பகலென்றார்.

பிரணவத்தின் பொருள் விளங்காது அகந்தைகொண்டுமயங்கிய பிரமாவைக் குட்டிச் சிறையிலிட்ட வரலாறு இப்புராணத்திற் பின்னர்ச் சொல்லப்பட்டுள்ளது. மேலேயுள்ள திருவிருத்தத்திற் சொல்லப்பட்ட "மாலய னெழிலி மேலோன்.......பிறவுஞ்சூழ...." என வருவனவற்றை இத்திருவிருத்தத்திலும் உயிர்கணல்க என்பதனோடு ஒட்டிப் பொருள்கொள்தல் சிறப்புடைத்தாம்.

[சலம்-நீர்; நலங்கிளர் குமரன் ஞானசொரூபியாகிய குமரன்' புலங்கிளருயிர் - ஆதாரமாகிய உலகத்தையும் அதன்கண் விளங்கும் ஆன்மாக்களையும்.] (104)

அணங்குசெய் தோற்றத் துப்பி னவிர்சுடர்க் குமரற் சூழ
மணங் கிளர் கமலக் காடு மலர்ந்தன வவனைச் சேர்வான்
றணங்கெழு புனலிற் புக்குத் தபனன்மே னாட்டஞ் சேர்த்தி
நுணங்கிடை மடவார் பல்லோர் நோற்றவ ணிற்றல் போலும்.

அழகை யாக்குகின்ற தோற்றத்தையுடைய பவளம்போல் விளங்கும் பிரபைபொருந்திய குமாரக்கடவுளைச் சூழ நறுமணம் வீசுகின்ற தாமரைக்காடு மலர்ந்து நிற்றல் (எதுபோலெனின்) துவளுகின்ற இடையினையுடைய இளமையோடு கூடிய மகளிர் பலர் அந்த முருகமூர்த்தியை யடையும்வண்ணம் குளிர்ச்சி பொருந்திய நீரில் (இறங்கி) சூரியதேவனை நோக்கி நின்று, அங்கே தவஞ்செய்யும் நிலைமையை நிகர்க்கும் என்பது கருத்து.

மலர்ந்தன - மலர்ந்த தன்மை; தன் ஆம் என்பது தணமென்றாயிற்று. அலர்ந்த செந்தாமரைப் பூக்கள் சூரியனைப் பார்ப்பனபோல், முருகக் கடவுள் எழுந்தருளிய தாமரைமலரைச் சூழ அத்தடாகத்திலே நிற்றல், அந்த முருகமூர்த்தியைச் சேரவேண்டி நீரில் நின்று மகளிர் சூரியனிடத்தில் வரம்வேண்டி நிற்றலை நிகர்க்குமென்றபடி; தாமரைமலரின நாளத்தின் நுண்மையையும் அசைதலையும் மகளிரின் நுணங்கிடைக்கும், அலர்ந்தமலரை முகத்துக்கும் ஒப்பிட்டவாறும்.

[... இங்கே தாமரைமலரின் மிகுதியையுணர்த்திற்று] (105)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண நகரசபை விளம்பரம்

இதன்பின்னுற் சொல்லப்படும் சந்தைகளும் காலையும் பெரியசடைக்குக் கிட்ட இருக்கும் பஸ் ஸ்ரான்டும் 1947ம் ஆண்டு தைமாதம் 1-ந் திகதி தொடக்கம் ஒரு வருஷத்திற்குக் குத்தகையாகக் கொடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்பட்டு இருக்கின்றன. 1-ம் 6-ம் குத்தகைகளுக்கு 500/- ரூபாயும் 2-ம் 3-ம் 4-ம் குத்தகைகளுக்கு 250/- ரூபாயும் மற்றச் சந்தைகளுக்கு 50/- ரூபாயும் கட்டிஎடுத்தபோமில் கேள்வி கேட்கவேண்டும். கேள்விப் பத்திரங்கள் ஒரு கடுதாசிக் கூட்டில் அடைக்கப்பட்டு கூட்டின் மேல் பக்கத்தில் இடதுபுறமாய் சந்தைக் குத்தகையின் கேள்விப் பத்திரமென்று எழுதி அதை நகரசபைத் தலைவருக்கென விலாசம் போட்டு 1946ம் ஆண்டு ஐப்பசிமாசம் 25ந் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்குப் பிந்தாமல் நகரசபைக் கந்தோருக்கு அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு குத்தகைக்கும் பிறம்பான கேள்வி கேட்கவேண்டும். சபையால் தெரியப்பட்ட கேள்விக்காரன் சங்கத் தலைவரால் நியமிக்கப்படும் தொகையை தெரியப்பட்ட திகதி தொடக்கம் 3 நாளைக்குள் கேள்வித தொகையில் மூன்றில ஒன்றைக் கட்டவேண்டும். 1946ம் ஆண்டு மார்கழிமாசம் 1ம் திகதிக்கு முன் கேள்வித்தொகையில் முன் கட்டப்பட்ட தொகையை நீக்கி மிகுதித் தொகையை முழுமையாகவே 5-ம் 7-ம் 8-ம் 9-ம் 10 ம் சந்தைகளுக்குக் கட்டவேண்டும். மற்றச் சந்தைகளுக்கு குத்தகைக்காரர் ஒவ்வொருவரும் நொத்தாரிசுச் செலவும் முத்திரையும் தான் பொறுத்து 1946ம் ஆண்டு மார்கழிமாதம் 30ம் திகதிக்குமுன் பிணை உறுதியும் எழுதிக்கொள்ள வேண்டும். இதன் நிமித்தமாக 1-ம் 2 ம் 3-ம் 4-ம் 6-ம் குத்தகைகளுக்குக் கேள்வி கேட்கும் போழுக்குக் கட்டும் காசுடன் இன்னும் ஒரு 150/- ரூபாய் ஒவ்வொரு குத்தகைகும் கட்டவேண்டும். அப்படிக் காசுகட்டத் தவறினால் போம் கொடுக்கப்படமாட்டாது.

மிகுதியானதொகையை 8 சரிபங்காய்ப் பிரித்து 8 மாதத்தில் கட்டவேண்டும் ஒவ்வொரு மாதமும் 15 ந் திகதிக்குமுன் கட்டவேண்டும். முதல் கட்டு 1947-ம் ஆண்டு தைமாதம் 15-ந் திகதிக்கு முன்னும் குத்தகையைப் பற்றிய விபரங்கள் அடங்கிய நிபந்தனைகளில் சொல்லிய பிரகாரம் கட்டவேண்டும். அப்படிக் காசு கட்டத் தவறினால் அல்லது சொல்லப்பட்ட திகதிக்குள் பிணை உறுதி எழுதப் பிந்தினால் கட்டிய முழுத்தொகையும் பறிமுதலாய்ப் போய்விடும். குத்தகையும் திரும்ப விற்கப்படும்.

சபைக்கு எந்தக் கேள்வியையாகுதல் அல்லது எல்லாக் கேள்வியையும் விலத்திவிட அதிகாரமுண்டு. நிபந்தனைகள் இந்தக் கந்தோரில் ஒட்டப்பட்டு இருக்கின்றது. இன்னும் மேலதிகமான விபரங்களை சபைக் காரியதரிசியிடம் அறிந்து கொள்ளலாம். சந்தைக்குள் இப்பொழுது அறவிடப்படும் விகிதங்கள் குறைக்கப்படமாட்டாது சபைத் தலைவருக்கு சந்தைக்குள் வெவ்வேறு வியாபாரத்துக்கு வெவ்வேறு இடங்கள் வகுத்துவைக்க அதிகாரமுண்டு. குத்தகை காறனும் கீழ்க் குத்தகைகாறனும் சபைத் தலைவரின் தீர்மானத்துக்குக் கட்டுப்படவேண்டும்

### சந்தைகள்

1. பெரியகடை 4 பக்கமும் ரோட்டு (தகரக் கொட்டில்கள் பிறநீங்கலாக) அத்துடன் தகரக் கொட்டிலுக்கும் ரோட்டுக்கும் இடையிலுள்ள வெளி இடமும் பிறநீக்கலாக. அத்துடன் புஸ்தகசாலைகளும் சறுபத்சாலைகளும் பிறநீங்கலாக.
2. பெரிய கடைக்குக் கிட்ட இருக்கும் மீன்கடையும் (பண்ணைத் துறையில் மீன் விற்கும் இடமும்).
3. சின்னக்கடை (இறைச்சிக் கடைகள் பிறநீங்கலாக)
4. செங்குந்தர் சந்தை இரண்டு அறைகளுடனும்.
5. சிவியாதெருச் சந்தை — பாஷையூர் கடற்கரையில் மீன் விற்கும் இடமும் (அறை பிறநீங்கலாக)
6. பெரியகடைக்குக் கிட்ட இருக்கும் காலையும் பஸ் ஸ்ரான்டும்.
7. தட்டாதெருச்சந்தை—(சிவப்பிரகாசம் ரோட்டு தச்சஒழுங்கைச் சந்தியில் காய் பிஞ்சும் மீன் விற்குமிடமும் பிறநீங்கலாக) அத்துடன் தட்டாதெரு சந்தையின் மேற்குப்புறமாக தில்லையம்பலத்துக்கு குத்தகையாய்கொடுத்த 2 பரப்பு நிலமும் பிறநீங்கலாக
8. முத்திரைச்சந்தை.
9. கொழும்புத்துறைச் சந்தை,
10. நாவாந்துறைச்சந்தை.

C. PONNAMBALAM
நகரசங்கதலைவர்.

நகாசங்க கந்தோர்,
யாழ்ப்பாணம், 30-9-46

G 84 7

## ஜீவாதார வைத்திய விளம்பரம்

நாடிப் பரீட்சையுடன்
3 நாள் 6 வேளை மருந்து 10 ரூபா
ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம், இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்திவரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்

(Mis 160 30-8—30-11-46)

## கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக்கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும் கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம், சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ருத்தல் விலை ரூபா 5·00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மேடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 27 26-4—25-10 (செ)

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:
**க. ஆறுமுகம்பிள்ளை**
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Mis 25 23-4-46 to 22-3-47)





எங்கும் கியாதிபெற்ற எமது ரேடியோ பீடிகளையே எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:
எல்லாஊர்களிலும் கிடைக்கும்
மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)

வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்
### வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம்ஆ. வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

அயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, டொன் கரலிஸ் கட்டிடம்,
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, October, 8, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org